# எந்தெந்த கடன்களுக்கு விண்ணப்பிக்கலாம்?

கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள் மூலம் வழங்கப்படும்

- பயிர்க்கடன்
- கால்நடைபராமரிப்புக்கடன்
- மீன்வளர்ப்புக்கடன்
- இதர அனைத்து வகையான கடன்கள்










## என்னென்ன ஆவணங்கள் தேவை?

அனைத்து கடன்களுக்கும் தேவையான அடிப்படை ஆவணங்கள் (ஸ்கேன் செய்யப்பட்டது)

- முகவரிச்சான்று.
- அடையாளச்சான்று.
- புகைப்படம்.
- ஆதார்எண்.
- குடும்பஅட்டை (ரேஷன்அட்டை).

## GRAINS மற்றும் தமிழ்நிலம் இணையதளத்துடன் ஒருங்கிணைப்பு

- விண்ணப்பதாரர் **'தனியர் விவரம்'** என்ற பகுதியில் தனது பெயர், முகவரி, பிறந்ததேதி, வயது, ஆதார் எண், நில உடமை விவரம் போன்றவற்றை உள்ளீடு செய்ய வேண்டும்.
- ஆதார் எண் மூலம் விவசாயிகளின் நிலம் குறித்த விவரங்கள் மற்றும் பயிர் விவரங்களை தானாகவே இணையதளம் மூலம் பெறுவது ஒரு முக்கிய செயல்பாடு ஆகும்.



## விண்ணப்பத்தின் நிலை குறித்து நேரடி தகவல்

- கடன் விண்ணப்பத்தின் நிலை குறித்து உறுப்பினர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக தகவல்.
- கடன் விண்ணப்பத்தின் அவ்வப்போதைய நிலை குறித்து அறியலாம்.



# இணையவழி கடன் வசதி

கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ள விவசாய பெருங்குடிமக்கள், சிறுவியாபாரிகள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுபான்மையின உறுப்பினர்கள் விரைவாகவும், எளிதாகவும் இணைய வழி கடன் பெறும் வசதி

## இதன் சிறப்பம்சங்கள்:

- இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி இரண்டு முறைகளிலும் கடனுக்காக விண்ணப்பம் செய்யலாம்.
- எப்போது வேண்டுமானாலும், எங்கே இருந்த படியும் கடனுக்காக ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியும். நேரம் மற்றும் இடம் சார்ந்த கட்டுப்பாடுகள் இல்லை.
- எளிதாகவும், உடனடியாகவும் விவரங்களை உள்ளீடு செய்திடும் வகையில் வடிவமைப்பு.
- காகித பயன்பாடு குறைவு. எனவே, அச்சுப் பிரதிகள் எடுக்கும் சிரமமும் இல்லை, செலவும் இல்லை.
- சுலபமான செயல் முறைகள் மூலமாக, கடன் விண்ணப்பங்கள் விரைவாக செயல்படுத்தப்படுகின்றன. எனவே, கடன் விண்ணப்பங்கள் மீதான பரிசீலனையில் தாமதம் குறைகிறது.
- உறுப்பினர் மற்றும் கடன் குறித்த விவரங்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்படும்.




## யார் விண்ணப்பிக்கலாம்?

- கடன் பெற விரும்பும் கூட்டுறவு நிறுவனத்தின் உறுப்பினர்கள் யார் வேண்டுமாயினும் விண்ணப்பிக்கலாம்.
- உறுப்பினர் அல்லாதோர், கடன்கோரி விண்ணப்பித்த பின்னர், சங்கசெயலாளரால் தொடர்பு கொள்ளப்பட்டு, உறுப்பினராக்கப்பட்ட பின்னர் கடன் அனுமதிக்கப்படும்.
- புதிய உறுப்பினராக விரும்புபவர்கள், சம்பந்தப் பட்ட சங்கத்தின் விவகார எல்லைக்குள் நிலம் வைத்திருக்க வேண்டும் அல்லது அங்கு வசிப்பவராக இருக்க வேண்டும்.

ANDROID APP ON Google play

Available on the iPhone App Store

## எப்படி விண்ணப்பிக்கலாம்?

- ஆண்டிராய்டு (Android) அலைபேசியில் கூகுள் பிளேஸ்டோர் (Google Play Store) செயலியின் மூலம் "**கூட்டுறவு**" என்ற செயலியை பதிவிறக்கம் செய்யவும்.
- "**கடன் விண்ணப்பம்**" என்ற குறியீட்டை தேர்ந்தெடுக்கவும்.
- இப்போது தெரியும் விண்ணப்பத்தில் கேட்கப்படும் விவரங்களை உள்ளீடு செய்யவும்.
- விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்.

